**200 வருடங்களாக இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்ற மலையக மக்களின் குறிப்பாக தென் மாகாண மலையக மக்களின் அபிவிருத்திக்காக சிங்களம், முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் சார்பாக அரசுக்கு முன் வைக்கும் கோரிக்கைகள்.**

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பானது தென் மாகாணத்தின் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை, குருநாகல் மாவட்டங்கள் மற்றும் கம்பகஹ மாவட்டத்தில் வாழுகின்ற மலையக புலம்பெயர் மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்தி தொடர்பாக செயற்படுகின்ற ஒரு சிவில் அமைப்பாகும். இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் இவ்வமைப்பின் மேலுமொரு நோக்கமாகும். அந்த வகையில் தென் மாகாண சிங்களம், முஸ்லிம் மற்றும் மலையக இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகம் என்ற தொனிப்பொருளில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் கடந்த ஆறு மாதங்களாக செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தி வந்துள்ளது. இதன் போது பங்குபற்றுனர்கள் மலையக மக்களின் பிரச்சினைகளை மிக ஆழமாக பகுப்பாய்வு செய்ததோடு, இம்மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தென் மாகாண ஆளுநர், அரச அதிகாரிகள், சிவில் அமைப்பினருக்கு கோரிக்கைகளை முன் வைத்து அவர்களுடன் கலந்துரையாட வேண்டுமென அவர்களாகவே கோரிக்கைகளை தயாரித்தனர். அந்த வகையில் 2024. 06. 12ம் திகதியான இன்றைய கோரிக்கைகளை கையளிப்பதோடு மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**காணி உரிமை மற்றும் காணிக்கான உரித்து:**

1. 1993ம் ஆண்டிலிருந்து 2018ம் வரை காலி மற்றும் மாத்தறை மலையக மக்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கு நிரந்தர உறுதிகளை வழங்கி அவர்களின் காணி உரித்தை உறுதிப்படுத்துதல்.

2. இதுவரை காணி மற்றும் வீட்டு வசதிகள் கிடைக்காத மக்களுக்கு காணி மற்றும் வீட்டு வசதிகளை வழங்குவதற்காக, தற்போது அரசாங்கத்தால் மலையக மக்களுக்காக முன்னெடுக்கப்படுகின்ற காணி மற்றும் வீட்டு வசதிகள் கருத்திட்டத்தில் காலி மற்றும் மாத்தறை மாவட்ட மலையக மக்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, பெருந்தோட்டங்களில் காணப்படுகின்ற காணி பிணக்குகளை தீர்ப்பதற்காக விசேட ஏற்பாடுகளை முன்னெடுத்தல்.

3. காணி, வீட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ள மலையக மக்களின் தரவுகளை சேகரிப்பதற்கான கருவி ஒன்றை உருவாக்குதல்.

**மலையக மக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குதல், அரச சேவைகளை உரிய முறையில் வழங்குதல்.**

1. பெருந்தோட்டங்களை அண்மித்த பகுதிகளில் சுகாதார சேவைகளைப் பெறுவதற்காக பிராந்திய ரீதியிலான வைத்தியசாலைகளை அமைத்தல்.

2. குடிநீர் மற்றும் மலசலக்கூட வசதிகள் மற்றும் பிரதேச சபைகள் ஊடாக தோட்டங்களில் கழிவுகளை அகற்றும் பணிகள் முறையாக செயற்படாமையினால், கழிவுகளை முறையாக அகற்றுவதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

3. தோட்டங்களுக்குள் பிரவேசிக்கும் பாதைகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பாதைகளை சீர்திருத்துதல் மற்றும் முறையாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. உயர் நீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு அமைவாக தோட்டங்களுக்கான தபால் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் மலையக குடியிருப்புகளுக்கான சொந்த முகவரியைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.

5. அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற அஸ்வெசும, முதியோர் கொடுப்பணவுகள் இதுவரை வழங்கப்படாத மலையக மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இதில் ஏற்பட்டுள்ள குறைப்பாடுகள் தொடர்பாக கண்டறிவதற்கான திட்டம் ஒன்றை முன்னெடுத்தல்

6. அரசாங்கத்தால் உறுதியளிக்கப்பட்ட 1700 ரூபா சம்பளத்தை உரிய முறையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**மலையகப் பிள்ளைகளின் பாடசாலை கல்வி மற்றும் தொழில் பயிற்சி வசதிகள்**

1. தென் மாகாணத்தில் காணப்படுகின்ற 10 தமிழ் பாடசாலைகளுக்கும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் ஏனைய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது போன்றே இப்பாடசாலைகளுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. பாடசாலை கல்வியை பூரணப்படுத்திய மலையக இளைஞர்களுக்கான தொழில் பயிற்சிகள் மற்றும் தொழில்வாய்ப்புகளை வழங்குதல்.

3. தென் மாகாண தோட்டப் பிரதேசங்களில் வாழுகின்ற மலையகப் பிள்ளைகளில் அதிகமான பெண் பிள்ளைகள் பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகுகின்றனர். கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களம் இது தொடர்பான தகவல்களைத் திரட்டி இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து மலையக பிள்ளைகளின் கல்வி நிலையை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

4. மலையக பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் கலை கலாச்சாரத்துக்கான திறமைகளை வளர்ப்பதற்காக பிரதேச செயலக பிரிவின் ஊடாக விசேட திட்டங்களை மேற்கொள்ளல்.

5. அரச நிறுவனங்களில் தமிழ் மொழி பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக தமிழ் உத்தியோகத்தர்களை நியமித்தல்.

6. காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் காணப்படுகின்ற தனியார் மற்றும் சிறு தேயிலைத் தோட்டங்களில் 16 வயதுக்கு குறைவான சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாக கேள்விப்படுகின்றோம். எனினும் அவர்கள் சாட்சியமளிப்பதற்கு அஞ்சுகின்றனர். எனவே இந்த விடயம் தொடர்பாக ஆராய்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசேட குழு ஒன்றை நியமித்தல்.

**மலையகப் பெண்களின் மேம்பாட்டை விருத்திச் செய்தல்.**

1. மலையகப் பெண்களுக்கும் சமூகத்தில் சிறந்த அந்தஸ்து கிடைக்க வேண்டும். எனவே இப்பெண்களின் கல்வி மற்றும் ஆளுமையை வளர்ப்பதற்காக பிரதேச செயலக பிரிவுகளில் விசேட திட்டங்களை முன்னெடுத்தல்.

2. பிரதேச, தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் ஏனைய பெண்களுக்காக முன்னெடுக்கப்படுகின்ற சேவைகள் மலையகப் பெண்களையும் சென்றடைவதற்கான செயற்பாடுகளை வகுத்தல்.

3. தோட்டங்களில் பணிபுரிகின்ற மலையகப் பெண்களின் எதிர்கால சேமிப்புகளான EPF (சேமலாப நிதி) ETF (சேவை நம்பிக்கை நிதி) ஆகியவைகளை வழங்காமல் இருப்பதற்கான முயற்சியாக தேயிலைத் தோட்டங்களை சிறு துண்டுகளாக பிரித்து கொடுத்து (Out Grower System) முன்னெடுககப்படுகின்ற உற்பத்தி முறையை உடனடியாக நிறுத்தி வழமைப் போல் பெண்களுக்கு நாளாந்த தொழிலை பெற்றுக்கொடுத்தல்.

4. கிராமிய பெண்கள் முறையாக வங்கிகளில் கடனை பெற வேண்டுமானால் பல ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் சாட்சியாளர்கள் கையொப்பமிட வேண்டும். இதனால் பெண்கள் உத்தியோகப்பூர்வ வங்கிகளில் கடன் வாங்காமல் அதிக வட்டியுடன் கடன் கொடுக்கும் நுன்கடன் நிறுவனங்களிடம் கடன்களைப் பெற்று மீள செலுத்த முடியாமல் பெரிதும் துன்பப்படுகின்றனர். எனவே இலகுவான முறையில் அரச வங்கிகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கிகளில் கடன் பெறுவதற்கான சிறந்த முறைகளை ஏற்படுத்த வேண்டும்.

5. தேயிலைத் தோட்டங்களில் மலசலக்கூட வசதிகள் மற்றும் ஓய்வறைகள் இல்லாமையால் குறிப்பாக பெண்கள் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். ஏனவே இதற்கான வசதிகளை மேம்படுத்துமாறு தோட்டக்கம்பனிகளுக்கு அரசு ஆலோசனை வழங்க வேண்டும்.
6.
7. தமது குடும்ப வறுமையின் காரணமாக மற்றும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கோடு வீட்டுப்பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பெண்களின் குடும்பங்கள் மற்றும் பிள்ளைகளின் நிலைமைகளை ஆராய்து கண்காணிப்பதற்காக விசேட செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை அமுல்படுத்துதல்.

**காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சார்ந்த சிங்கள, முஸ்லிம் மற்றும் மலையக இளைஞர்கள் மற்றும் பெண் பிரதிநிதிகளுடன் இணைந்து பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு.**